| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **04/05/2024** | முதல் | **8/05/2024** |
| | அறிக்கை எண் : | **036/ 2024** | வெளியீட்டு நாள் : | | **03/05/2024** | |

### திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 40°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°-29° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (28.04.2024 **முதல்** 02.05.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 08-05-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/04 | 29/04 | 30/04 | 01/05 | 02/05 | **தேதி** | **நாள்-1** 04/05 | **நாள்-2** 052/05 | **நாள்-3** 06/05 | **நாள்-4** 7/05 | **நாள்-5** 08/05 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 5.4 | மழை (மி.மீ) | 1 | 2 | 4 | 3 | 9 |
| 39 | 40 | 40 | 41 | 41 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 42 | 41 | 40 | 40 | 38 |
| 27 | 28 | 29 | 27 | 29 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 29 | 28 | 27 | 27 | 27 |
| 5 | 4 | 4 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 6 | 4 | 8 |
| 69 | 72 | 64 | 63 | 60 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 60 | 60 | 70 | 70 |
| 46 | 57 | 52 | 41 | 34 | | 20 | 30 | 30 | 30 | 30 |
| 11 | 7 | 8 | 7 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 8 | 8 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | **தென் மேற்கு** | **வட மேற்கு** | **தென் கிழக்கு** | **வட மேற்கு** | **மேற்கு** |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 6, 7 தேதி லேசான மழையும் மற்றும் 8 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 38°-42° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 27° - 29° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், தென்மேற்கு, வடமேற்கு, தென்கிழக்கு மற்றும் மேற்குதிசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மே 4ம் தேதி முதல் 8 தேதி வரை இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு. மேலும், மணிக்கு 30 முதல் 40 கி.மீ வேகத்தில் தரைக் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அணைத்தல், கரும்பு பயிருக்கு

விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை பயிர்பந்தல்களில் துரு பிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வெண்டை, செண்டு மல்லி, கால்நடை.**

**வெண்டை:**

வெண்டை பயிரில் தண்டு மற்றும் காய்ப்புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலால் வெண்டைச் செடியின் இளங்குருத்து வாடித் தொங்கும். மொக்கு மற்றும் பூக்கள் உதிர்ந்து விடும். காய்கள் உருக்குலைந்து காணப்படும்.

முதலில் தாக்கப்பட்ட குருத்து, மொட்டு, பூக்கள் மற்றும் காய்களை சேகரித்து அழிக்க வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

மேலும் 10 லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி ஆசாடிராக்டின் அல்லது 500மில்லி வேப்பங்கொட்டைக் கரைசல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**செண்டு மல்லி:**

செண்டு மல்லி பூ பயிரில் சிவப்பு சிலந்தி பூச்சிகள் பரவலாக தென்படலாம்.

இப்பூச்சிகள் செடிகளின் இலைகள் மற்றும் பூக்களிலிருந்து சாற்றினை உறிஞ்சும். சேதம் அதிகமாகும் போது பூக்கள் காய்ந்து விடும்.

இதனைக் கட்டுப்படுத்த புரோபர்கைட் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1½மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

கோடை காலத்தில் முட்டை கோழிகளுக்கு இடவசதி 2 ½ அடி வரை அதிகரிக்க வேண்டும்.

குளிர்ச்சியான சுத்தமான தண்ணீரை 5 முதல் 6 முறை வரை கொடுக்க வேண்டும்.

தீவனத்தட்டு, தண்ணீர் தட்டு போன்றவற்றை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

கோழிகள் நெருக்கடி இன்றி சுற்றித்திரிய இடவசதி ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

வெப்பத்தால் முட்டையின் மேல் ஓடு மெலிந்து காணப்பட்டால், வைட்டமின் டி, கிளிஞ்சல்தூள் போன்றவற்றை தீவனத்துடன் சேர்த்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு கோடை வெப்பத்தில் இருந்து கோழிகளைப் பாதுகாப்பதன் மூலம் அவற்றின் இறப்பை தடுத்து நஷ்டம் ஏற்படுத்துவதை தவிர்க்கலாம்.